CAREERINDIA

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**
**Code No. : 85-T**

**CCE PF**
**CCE PR**

**ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ**

# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh + Private Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்க வேண்டும்.

iv) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகள் தவிர)

vi) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

viii) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

www.careerindia.com

CAREERINDIA



I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. இந்திய அரசுச் சட்டம் 1935, மிக முக்கியமான ஆவணமாக கருதப்படுவதற்குக் காரணமென்ன ?

   (A) மாகாணங்களில் இரு அவைகளையுடைய அரசுகளை அறிவித்தது

   (B) கட்டுப்பாட்டு வாரியத்தை அமைத்தது

   (C) சமய அடிப்படையில் தனியின வாக்காளர் தொகுதியை அமைத்தது

   (D) அது இந்திய கூட்டரசு ஆட்சி ஏற்பட வழி வகுத்தது.

2. **"அ"** பிரிவில் சமூக சீர்திருத்தவாதிகளும், **"ஆ"** பிரிவில் அவர்கள் ஆற்றிய பணிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான இணையைக் கண்டுபிடி.

| | **பிரிவு-அ** | | **பிரிவு-ஆ** |
|---|---|---|---|
| (a) | இராஜா ராம்மோகன் ராய் | (i) | குலாம் கிரி |
| (b) | தயானந்த சரஸ்வதி | (ii) | சம்வதா கவ்முடி |
| (c) | ஜோதிபா பியுலே | (iii) | நியூ இந்தியா |
| (d) | அன்னி பெசன்ட் அம்மையார் | (iv) | சத்யார்த்த பிரகாஷ். |

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| (A) | i | iii | ii | iv |
| (B) | ii | iv | i | iii |
| (C) | iii | ii | iv | i |
| (D) | iv | i | iii | ii. |

3. கிராமப்புற பெண்களின் முன்னேற்றத்திற்காக கருநாடக அரசு நடைமுறைப்படுத்திய திட்டம் எது ?

   (A) லோக் அயுக்தா (B) ஸ்திரி சக்தி

   (C) சக்சரா பாரத் (D) குடும்ப கட்டுப்பாடு திட்டம்.

www.careerindia.com

CAREERINDIA



4. ஐ.நா. சபையின் வரலாற்றில் 1948, டிசம்பர் 10 ம் நாள் ஒரு முக்கியமான நாள் ஆகும். காரணம் என்ன ?

(A) மனித உரிமைகள் அறிவிக்கப்பட்டன

(B) ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது

(C) படைக்குறைப்பு சாதிக்கப்பட்டது

(D) நிறவேற்றுமை முடிவுற்றது.

5. நமது அரசியல் சாசனத்தில் 24வது சட்டப்பிரிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. காரணம் அது பின்வருவனவற்றில் எதனைத் தடுக்கிறது ?

(A) குழந்தை தொழிலாளர்களை (B) தீண்டாமையை

(C) வரதட்சணையை (D) ஊழலை.

6. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் குறிக்கப்பட்ட சரியான ஆற்று பள்ளத்தாக்கு திட்ட அணைகளின் இணையைப் பொருத்துக :




(A) 1 — நாகார்ஜுன சாகர், 2 — பக்ரா நங்கல், 3 — கோசி

(B) 1 — பக்ரா நங்கல், 2 — கோசி, 3 — நாகார்ஜுன சாகர்

(C) 1 — கோசி, 2 — நாகார்ஜுன சாகர், 3 — பக்ரா நங்கல்

(D) 1 — நாகார்ஜுன சாகர், 2 — கோசி, 3 — பக்ரா நங்கல்.

7. எந்த மாநில கடற்கரையில் கடல் அரிப்பு அதிகம் காணப்படுகிறது ?

(A) கேரளம் (B) தமிழ் நாடு

(C) ஒரிசா (D) மேற்கு வங்காளம்.



www.careerindia.com

CAREERINDIA



8. இந்திய பொருளாதாரத் திட்டத்தின் தந்தை யார் ?

(A) Dr. M.S. சுவாமிநாதன் (B) Dr. நார்மன் போர்லாக்

(C) சர் M. விசுவேசுவரய்யா (D) இராம்மோகன் ராய்.

9. பசுமைப் புரட்சி எதைக் குறிக்கிறது ?

(A) உணவு தானியங்களின் உற்பத்தி பெருக்கம்

(B) மீன் உற்பத்தி பெருக்கம்

(C) பால் உற்பத்தி பெருக்கம்

(D) மாமிச உற்பத்தி பெருக்கம்.

10. விப்ரோ ( Wipro ) தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் யார் ?

(A) ஏக்தா கபூர் (B) திருபாய் அம்பானி

(C) நரேஷ் கோயல் (D) அசீம் பிரேம்ஜி.

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரியில் விடையளி : $14 \times 1 = 14$

11. வாய்மொழி வரலாற்றுக்கு இந்தியர்கள் ஏன் அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் ?

12. சுவாமி விவேகானந்தர் ஏன் இராமகிருஷ்ண மிஷனை ஏற்படுத்தினார் ?

13. கி.பி. 1905-ல் ரஷ்யர்கள் கொடிய சார் மன்னர்களுக்கு எதிராக ஏன் புரட்சி செய்தனர் ?

14. நிறவேற்றுமை எவ்வாறு உலக அமைதியை மிகவும் பாதித்தது ?

15. ஆப்பிரிக்காவில் நிற வேற்றுமையை எதிர்த்து போராடியவர் யார் ?

16. சம ஊதியச் சட்டம் ஏன் ஏற்படுத்தப்பட்டது ?

17. 'குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு நல நிதியம்' ஏன் அமைக்கப்பட்டது ?

18. கோடையில் வடஇந்தியாவில் ஏன் அதிக வெப்பம் காணப்படுகிறது ?

19. தரிசு நிலங்கள் எவ்வாறு வேளாண்மைக்கு பயன்படுத்தப்படுகிறது ?



www.careerindia.com

CAREERINDIA



20. இந்திய விவசாயிகள் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் விதைத்தாலும் அக்டோபர் மாதத்தில் விளைச்சலைப் பெறக் காரணம் என்ன ?

21. சுரங்கப் பகுதிகளில் நிலச்சரிவு ஏன் ஏற்படுகிறது ?

22. லோக்சபாவில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையைச் ( budget ) சமர்ப்பிப்பவர் யார் ?

23. வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்படுவது எது ?

24. மாவட்ட தொழிற்சாலை மையங்கள் ஏன் அமைக்கப்பட்டுள்ளன ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று சொற்றொடர்களில் விடை எழுதுக : 25 × 2 = 50

25. "அறிவியல் வளர்ச்சிகள் கடல் பயணத்திற்கு எவ்வாறு வழிவகுத்தன?" உனது கருத்து என்ன ?

26. ஐதராபாத் கருநாடகப் பகுதிகள் யாவை ?

27. போர்த்துக்கீசியரிடமிருந்து கோவா எவ்வாறு விடுதலையடைந்தது ?

*அல்லது*

இந்தியா எவ்வாறு அகதிகளின் பிரச்சனைகளை தீர்த்தது ?

28. 'நாசிச கொள்கை ஜெர்மனியை அழிவுக்குட்படுத்தியது' எவ்வாறு ? விளக்குக.

29. இன உணர்வு ( Communalism ) எவ்வாறு நம் நாட்டின் வளர்ச்சிக்கு கேடு விளைவிக்கிறது ?

30. உலகப் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பன்னாட்டு நிதி நிறுவனம் ( IMF ) எவ்வாறு ஒரு முக்கிய பங்காற்றுகிறது ?

31. சுய உதவி குழுக்கள் என்றால் என்ன ?

32. இந்திய தீபகற்ப பீடபூமி எவ்வாறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது ?

33. மண் அரிப்பை நாம் எவ்வாறு தடுக்கலாம் ?

34. பசுமை மாறாக் காடுகள் மற்றும் பாலைவனக் காடுகள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள் யாவை ?

www.careerindia.com

CAREERINDIA



35. தற்போது தீர்ந்து போகும் ஆற்றல் வளங்களின் பயன்பாட்டை நாம் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. காரணங்கள் கூறுக.

36. தகவல் தொடர்பின் முக்கியத்துவங்கள் குறித்து எழுதுக.

37. கிராமப்புறத்தி ருந்து நகர்ப்புறங்களுக்கு ஏற்படும் குடியேற்றத்தை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

38. தனிநபர் வருமானம் நாட்டு வளர்ச்சியின் உண்மையான அளவீடாக ஏன் அமைவதில்லை ?

39. உலகமயமாதல் எவ்வாறு சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு கேடு விளைவிக்கிறது ?

40. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் புரட்சியாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

41. விடுதலைக்குப் பின் இந்தியா எதிர்கொண்ட பிரச்சனைகள் யாவை ?

42. ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இந்தியப் பொருட்கள் யாவை ?

43. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட முக்கிய பிரச்னைகள் யாவை ?

44. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஏற்படும் உறவைப் பாதிக்கும் காரணங்கள் யாவை ?

45. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

46. இந்தியாவில் கிடைக்கும் முக்கிய கனிம வளங்கள் யாவை ?

47. பல்வகையான தகவல் தொடர்புகள் யாவை ?

48. மனிதனின் ஆயுளை அதிகரிக்க உதவும் காரணிகள் யாவை ?

49. ஒரு வங்கியில் தொடங்கப்படும் ஏதேனும் இரு வகை வங்கி கணக்குகளை எழுதுக.

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக்கியங்களில் விடை தருக :

$6 \times 3 = 18$

50. கி.பி. 1857 ன் பெரும் புரட்சிக்கான அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களை விளக்குக.

*அல்லது*

கல்வித் துறையில் ஆங்கிலேயர் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் யாவை ?



www.careerindia.com

CAREERINDIA



51. நம் நாட்டில் அயல்நாட்டுக் கொள்கையை ஏற்படுத்த தூண்டுகோலாக அமைந்த காரணிகள் யாவை ?

*அல்லது*

ரஷ்யாவுடன் இந்தியா கொண்டுள்ள உறவைப் பற்றி விளக்குக.

52. தீண்டாமையை பூண்டோடு ஒழிக்க அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

53. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள் யாவை ?

*அல்லது*

ஓரிடத்தில் தொழிற்சாலையமைக்கத் தேவையான காரண அம்சங்கள் யாவை ?

54. கிராமப்புற வளர்ச்சியின் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

*அல்லது*

மத்திய அரசின் வரிகளற்ற வருமானத்தின் அம்சங்கள் ( aspects ) யாவை ?

55. ஒரு வங்கியில் கணக்கு தொடங்குவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

*அல்லது*

ஆயுட் காப்பீட்டுறுதி ( life insurance ) திட்டத்தின் நன்மைகள் யாவை ?

V. பின்வரும் வினாவிற்கு எட்டு வாக்கியங்களில் விடை தருக : 4

56. டாக்டர் அண்ணல் அம்பேத்கார் இந்தியச் சமூகத்திற்கு ஆற்றிய அரும்பணிகள் யாவை ?

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வருமிடங்களைக் குறிக்கவும் : $1 + 3 = 4$

a) $82\frac{1}{2}^{\circ}$ கிழக்கு ரேகை

b) நர்மதை நதி

c) கோரமண்டல் கடற்கரை.

**பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா : (வினா எண் 57க்கு மாற்று வினா)**

இந்திய மக்களின் வாழ்க்கையில் இமய மலையால் ஏற்படும் நன்மைகள் யாவை ? 4



www.careerindia.com